‘திராவிட மாடல்’ கொள்கை வென்றிட


# வாழ்த்துங்கள் அண்ணனே!

எங்கள் உயிரே... உயிர் மூச்சே... அறிவே... ஆற்றலே... தமிழ் ஊற்றே... பெரியாரின் தளபதியே.. தமிழினத் தலைவரே....

தம்பி வா... தலைமையேற்க .. வா... என அழைத்தவரே..... எண்ணற்றதம்பிமார்களைபதவிகளில் அமர வைத்து அழகு பார்த்த திராவிடக் கண்ணனே... எங்கள் அண்ணனே! உங்களின் மறைவு நாளாக இந்த நாள் நினைக்கப்படுகிறது. நானோ நான் உங்கள் கொள்கைகள் வாழ்ந்து கொண்டிருக்கும் வரை நீங்கள் வாழ்கிறீர்கள் என்பதாக நம்புகிறேன்.

இன்று நம் முதல்வர் சொல்லுகின்ற திராவிட மாடல் இந்தியா முழுவதும் பேசப்படுகிறது. அன்று நீங்கள் திராவிடம் பேசியபோது உங்களை பிரிவினைவாதி என்றார்கள். அந்தக் கொள்கையை கைவிடவில்லை என்றால் ஜெயிலில் அடைப்போம் என்று மிரட்டினார்கள். ஆனால் கடந்த 75 ஆண்டுகளாக உங்கள் ஆட்சிதான் நடந்து கொண்டிருக்கிறது. இன்று நம் முதல்வர் திராவிட மாடல். ஆட்சியை நடத்துவதோடு. இதுதான் ஒன்றியத்தில் இருக்கும் சனாதன சன்மார்க்க அரசியலுக்கு மாற்று என்று சொல்லி ஒன்றிய அரசின் வயிற்றிலே புளியை கரைத்து விட்டிருக்கிறார்.


இதனால் ஒன்றிய அரசு ஆட்டம் காணுகிறது. அச்சப்படவும் செய்கிறது. ஒன்றிய அரசு இன்று நான் முதல் எதிரியாக கழகத்தையே கருதுகிறது. எதிர் வரப்போகும் மாநில தேர்தலில் கழகத்தையும் நமது முதல்வரையும் தோற்கடிப்பதையே தன் முதல் பணியாக எண்ணி பணியாற்றி வருகிறது.



அண்ணனே....! உங்கள் தலைவர் பெரியாரும். உங்கள் பிரியத்துக்குரிய தொண்டரான கலைஞரும். உங்கள் இதயக்கனியான எம்.ஜி.ஆர். அவர்களும் ஆசிகள் வழங்கிடதளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் திராவிட மாடல் இந்தியாவின் மாற்று கொள்கையாக தாங்கி பிடித்திருப்பதை வாழ்த்தி.... அந்தக் கொள்கை வென்றிட வாழ்த்துங்கள் அண்ணனே!...



**வி.சி.குகநாதன்**
திரைப்பட
இயக்குநர்



துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, ஜார்ஜ் டவுன், பிராட்வே சாலை, பி.ஆர்.என் கார்டனில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் முன்னேற்றப் பணிகளை நேற்று (03.02.2026) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தி, ஆலோசனைகள் வழங்கினார். இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி.ஸ்ரேயா பி.சிங், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை பொறியாளர் கிருஷ்ணசாமி. கண்காணிப்பு பொறியாளர் திரு.இளம்பருதி, மண்டலக் குழுத்தலைவர் பி.ஸ்ரீராமலு, பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

பேரறிஞர் அண்ணா நினைவு நாள்!

# திருவொற்றியூர் தொகுதி தி.மு.க.சார்பில் சிலைக்கு மலரஞ்சலி!

## கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில் மரியாதை!

சென்னை, பிப்.4-

பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு நாளை முன்னிட்டு திருவொற்றியூர் வள்ளலார் நெடுஞ்சாலையில் மாநில மீனவரணி துணை தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் தலைமையில் கழகத்தினர் புகழஞ்சலி செலுத்தினர்.

இயக்கத்தின் தந்தை, தாய்நாட்டிற்கு தமிழ் நாட்டு என பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருவொற்றியூர் வள்ளலார் நெடுஞ்சாலை அஜாக்ஸ் என்ஃபீல்ட் தொழிற்சாலை அருகில் அமைந்துள்ள திருவுருவ சிலைக்கு திருவொற்றியூர் தொகுதி திமுக சார்பில் மாநில மீனவரணி துணைத் தலைவர், ★திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர்★ அவர்கள் கழக தோழர்களுடன் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வில் 5வது வட்டக் கழக செயலாளர் கே.பி. சொக்கலிங்கம், கழக பொதுக்குழு உறுப்பினர் வி.இராமநாதன் கழக செயற்குழு உறுப்பினர் இரா.முருகேசன் மத்திய பகுதி பொருளாளர் எம். எஸ்.நாகலிங்கம், பகுதி முன்னால் துணைச் செயலாளர் இ.ரமேஷ், வட்டக் கழக செயலாளர் ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதி கே. கார்த்திகேயன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் கே.தேசிங், துணை அமைப்பாளர்கள் எஸ். செல்வம் டி..மகேந்திரன் ஆர்.குமரன், எம்.ரமேஷ், வே.கோபால் கே.ரமேஷ் வி.வேலாயுதம், டி.எஸ். பாபு, ராமையா, கே.செந்தில், துரைராஜ், எச். அலெக்ஸ், ஆர்.எம்.செல்வம், எஸ்.ஈசாக், ஆர்.சேகர், எஸ்.கிருஷ்ணன் டி.ராஜவேல், மதுரை முத்து, ஜோதி, அன்பு செல்வம், அஸ்வின், சத்யா, தன்ராஜ், பீட்டர், கோபி கிருஷ்ணா, பி.ரவி எஸ்.எல்லப்பன், வின்சென்ட், டைலர் மணி, வி.வசந்த், வை.ஃபாருக் ஜி.சுப்பிரமணியன், பிரவீன் ராஜ், அந்தோணி, கஜேந்திரன் டி.ரமேஷ் கோவிந்தசாமி, ராதாதங்கவேல், தங்கவேல், இ.பி.இளங்கோ, மூர்த்தி, அ.பாண்டியன் கே.எஸ்.ஆனந்தன் கருணாநிதி ராமராஜ், தேவராஜ், எம்.எஸ்.ரவி, தயாளன், இரா.கணேசன், வசந்த், ஆர்.சிவா, சுகந்தா, மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன்–இ.கருணாநிதி எம்.எல்.ஏ.–எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. சிறப்புரை!

# பம்மல் வடக்கு - தெற்கு பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

## பம்மல் வே. கருணாநிதி தலைமை! திருநீர்மலை த. ஜெயகுமார் வரவேற்புரை!

காஞ்சிபுரம், பிப்.4-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு - தெற்கு பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் நாளை (5.2.2026-வியாழக்கிழமை), மாலை 6 மணி, S.S.மஹால், பம்மலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தெற்கு பகுதிச் செயலாளர் பம்மல் வே.கருணாநிதி தலைமை வகிக்கிறார்.

வடக்குப் பகுதிச் செயலாளர் திருநீர்மலை த. ஜெயகுமார் வரவேற்கிறார்.

கே.சந்திரன்,மு.ஶ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, ச.பிரபு, சி.பார்த்தசாரதி, இரா.குமரேசன், க.சுந்தரமூர்த்தி,மாநகர கழகப் பிரதிநிதி, இரா.பாபுஜி, மு. நித்தியானந்தம், ஞா. பிரபு, ப.காளேஸ்வரன் R.உமா சங்கர், பா.டில்லி, துரை. இளங்கோவன், N.பன்னீர்செல்வம், பா.கவிதா, பி.ஜெ.வேந்தன், N.K.ரவிச்சந்திரன் இரா.கந்தவேலு R. கோகுல், சு.மனோகரன்,எஸ்.அமிர்தராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் குறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் மேயர் க.வசந்த குமாரி, துணை மேயர் கோ.காமராஜ் ரபி அகமது, அ.தமிழ்மாறன் இரா. நரேஷ்கண்ணா, கோல்டு டி.பிரகாஷ்,பேராசிரியர் எல்.பிரபு, வி.ரவிச்சந்திரன் PKA.சத்தியபிரபு பம்மல் வீ.தினேஷ், ப.அன்பழகன், க.மோகன், மு.நி.தமிழ்குமரன், A.அனிஸ்டன், வி.எஸ். ஜெகன்நாதன், மு.இன்பசேகர், என்.காந்தி, எ.முகம் மதுஅப்பாஸ், எம்.சாலா (எ) சுகுமாறன், பி.ஶ்ரீதர் பி.ஆண்டவன்,இ.பாலாஜி, டி.எம்.ஜோசப், கலைவாணிபிரபு, வாணிஶ்ரீவிஜயகுமார், சித்ராதமிழ்குமரன், கல்யாணிடில்லி, ரம்யாசத்தியபிரபு, எ.மதினாபேகம், சத்யாமதியழகன், சண்முக சுந்தரி,ஜெயகுமார் சித்ரா தேவி முரளிதரன் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக அணிகளின் மாவட்ட, மாநகர, பகுதி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2, BLC, BDA, BYO மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

A.செந்தில்குமார், R.முரளிதரன், C.P.வினோத் குமார், அ.ஜோஸ் பிரபு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

